**தலைப்பு 176 – துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அலுவல்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 176 – துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அலுவல்கள் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூன் 22 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 2,227.82 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 214.52 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 2,013.30 மில்லியன் அதாவது 90.37 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 216.54 | 205.81 | 10.73 | 4.96 |
| மூலதனம் | 2,011.28 | 8.71 | 2,002.57 | 99.57 |
| மொத்தம் | 2,227.82 | 214.52 | 2,013.30 | 90.37 |

**2.2 முற்பணக் கணக்குகள்**

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 17601 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 6.00 | 5.89 | 2.90 | 5.02 | 20.00 | 14.31 |

**2.3 கட்டுநிதிக் கணக்கு**

அமைச்சின் கீழ் வரும் 7002/0000/00/0115/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 10,051 ஆக இருந்தது.

**2.4 கணக்காய்வு அவதானிப்பு**

துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அலுவல்கள் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3. பொருண்மையானதும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

அமைச்சினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) |
| (ஆ) | அடியிதழ் பதிவேடு | நிதிப்பிரமாணம் 341 |

**3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 05 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 2,000.62 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடுகள் முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 23 செலவின விடயங்களுக்காக மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக ரூபா 11.89 மில்லியன் அதாவது தேறிய நிதி ஏற்பாட்டில் 05 சதவீதம் முதல் 96 சதவீதம் வரையிலான வீச்சில் நிதி ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன.

**3.3 கட்டுநிதிக் கணக்கு**

2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் அமைச்சினால் தீர்க்கப்படாதிருந்த செயல்நிமித்த உப கட்டுநிதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 8,800 ஆக இருந்தது. வேலை இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தரொருவரால் தீர்க்கப்பட வேண்டிய அந்த மீதிகள் பல வருட காலமாகக் மன்கொண்டுவரப்பட்டிருந்தது.

**3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 17601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம் 2016 யூலை 18 ஆந் திகதி வரையிலும் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1.00 மில்லியனாக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளின் காலப் பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த நிலுவைக் கடன் மீதிகள் 01 வருடம் முதல் 26 வருடங்கள் வரையான காலவீச்சிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கு 2016 யூலை 18 ஆந் திகதி வரையிலும் முடியாதிருந்தது.

(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் தொடர்பான கட்டுப்பாட்டுக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட மீதி மற்றும் திறைசேரி புத்தகங்களில் அத்திகதியில் காணப்படுகின்ற மீதி என்பவற்றுக்கிடையே ரூபா 80,823 இணக்கஞ் செய்யப்படாத மீதியொன்று காணப்பட்டது.

**3.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**உள்ளகக் கணக்காய்வு**

அமைச்சின் விடயப்பரப்பிற்குள் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் 2015 யூலை 06 ஆந் திகதி முதல் உள்ளகக் கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த பிரிவிற்காக பிரதான உள்ளகக் கணக்காய்வாளருடன் வேறுமொரு உத்தியோகத்தர் மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்தார்.

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

அமைச்சிற்குரிய ரூபா 8.30 மில்லியன் கூட்டுப்பெறுமதியான 03 மோட்டார் வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கில் ஒன்று என்பன ஒரு வருட காலமாக விளைவற்று வளாகத்தில் தரித்து வைக்கப்பட்டிருந்தது.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்ட பற்றாக்குறைகள்**

2015 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வு அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட மிகை, பற்றாக்குறை மற்றும் வழங்கப்பட்ட ஏனைய பரிந்துரைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 757(2) மற்றும் (3) இன் பிரகாரம் 2016 யூலை 18 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான பதிவு செய்தல் உரித்தைக் கொண்டுள்ள நான்கு வாகனங்கள் முறையாகக் கையேற்கப்படாமல் அமைச்சினால் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**(ஈ) தளபாடப் பொருட்களினதும், அலுவலக உபகரணங்களினதும், இயந்திரம் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் பெறுமதி மாற்றங்கள் வெளிப்படுத்தப்படாமை**

தளபாடப் பொருட்கள், அலுவலக உபகரணங்கள் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் போன்ற சொத்துத் தொகுதிகளில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட மீதிக்கும் 2015 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட மீதிக்கும் இடையே ரூபா 2.01 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது.

**(உ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

2008 ஆம் ஆண்டின் போது கொழும்புத் துறைமுகத்தை விரிவுபடுத்தும் செயற்திட்டத்திற்காக இலங்கை துறைமுக அதிகாரசபையால் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் மத்திய அரசினால் வெளிநாட்டுக் கம்பனிக்கு மீளளிப்புச் செய்யவேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 48.97 மில்லியன் வரித்தொகை கொடுப்பனவு தொடர்பாக நிகழத்தக்க பொறுப்பொன்று காணப்பட்டது.

## 3.7 வெளிநாட்டுதவி செயற்திட்டம்

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் வெளிநாட்டு நிதியீட்டத்தின் கீழ் காலி துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ரூபா 2,000 மில்லியன் நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டத்திற்காக தேவையான நிதி ஏற்பாட்டை மேற்கொள்வதற்கு முன் அந்த செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்குத் தேவையான விடுவிப்பு மற்றும் இணக்கமொன்று உலக மரபுரிமை பாதுகாத்தல் வேலைத்திட்டத்தின் கீழ் யுனெஸ்கோ நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்ளத் தவறியமையின் காரணமாக செயற்திட்ட நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது.

## 3.8 செயலாற்றல்

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினதும் செயல்நடவடிக்கைத் திட்டத்தினதும் பிரகாரம் அமைச்சின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

அமைச்சிற்குரிய விடயப் பரப்பில் காணப்படுகின்ற 2015 செப்தெம்பர் 21 ஆந் திகதிய 1933/13 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் பிரகாரம் கையளிக்கப்பட்ட பணிகள் மற்றும் இலக்குகளில் கீழே காண்பிக்கப்படுகின்ற பிரதான பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(i) சிதைவடைந்த கப்பல் மற்றும் கடலில் மூழ்கியுள்ள கப்பல்களை கையேற்றல், கடற்கரையோர போக்குவரத்துச் சேவைகளை நடாத்துதல் தொடர்பான பணிகள்.

(ii) கப்பற்துறை அபிவிருத்தி நிதியத்திற்கு அறவிடவேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 422.64 மில்லியன் கடனை அறவிடல் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள்.

**(ஆ) திட்டமிடல்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(i) சர்வதேச கடல்சார் அமைப்பின் நோக்கத்தின் பிரகாரம் உள்நாட்டு சட்டங்களை தயாரிப்பதற்காக சட்ட வரையொன்றை பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) வியாபார மற்றும் கப்பற்துறை நடவடிக்கைகளுக்காக அறவிடப்படுகின்ற கட்டணத்தை திருத்தும் நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் 2015 யூன் 30 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) 2015 யூன் 30 ஆந் திகதியில் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக விடுவித்தல் சான்றிதழ் (CDC) மற்றும் தகைமைச் சான்றிதழ் (COC) அச்சிடல் செயற்பாடுகள் ஆரம்ப மட்டத்தில் காணப்பட்டன.

(iv) இலங்கையின் மாலுமிகளுக்கு வழங்கப்படுகின்ற சான்றிதழ்களின் சர்வதேச அங்கீகாரம் தொடர்பாக கொரியாவுடனும் போர்த்துக்கல்லுடனும் புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அதில் போர்த்துக்கல்லுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அலுவல்கள் அமைச்சின் முன்னாள் செயற்திட்ட அமைச்சரின் கோரிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டில் 29,000 வாழ்த்து அட்டைகள், கடித உறைகள் மற்றும் ஸ்டிக்கர் என்பவற்றை அச்சிட்டு 2014 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் வழங்குவதற்காக ரூபா 906,192 தெகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. 2015 சனவரி 08 ஆந் திகதி எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அமைச்சுக்களின் வழமையான செலவினங்களுக்குப் புறம்பாக செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செலவினங்களை நிறுத்துவதற்காக ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அந்த ஆலோசனையின் பிரகாரம்

இந்த பட்டியல்களுக்கு கொடுப்பனவை நிறுத்தியதற்கு எதிராக வழங்குனர்கள் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்காக முறையீடொன்று அமைச்சிற்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 3.10 நட்டமும் இழப்பும்

அமைச்சிற்குரிய ஜீப் வாகனத்திற்கு ஏற்பட்ட நட்டமான ரூபா 481,550 தொகையை உரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.11 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 38 | 21 | 17 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 07 | 01 | 06 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 86 | 55 | 32 | 01 |
| (iv) | ஆரம்ப நிலை | 54 | 23 | 31 | - |
| | மொத்தம் | 185 | 100 | 86 | 01 |